www.isrbexpo.org

ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ

இந்திய சிறு மற்றும் கிராமப்புறத் தொழில்களுக்கான மையம்

(புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஓர் அங்கம்)

# கிராமப்புற இளைஞர்களுக்கு பாக்கு மட்டை தட்டு உற்பத்தி - சுயதொழில் கருத்தரங்கம் - கவசம்பட்டு, வேலூர்

இளைஞர்கள் சுயதொழில் செய்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் வேலூர் மாவட்டம் கவசம்பட்டு கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளில் புதிய தலைமுறை அறக்கட்டளை சார்பில் ஜனவரி 30, 2021 அன்று பாக்கு மட்டை தட்டு உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் சென்னை வளசரவாக்கத்தில் 18 ஆண்டுகளுக்கு மேலாகச் சிறந்த முறையில் இயங்கிவரும் “எவர் கிரீன் ஏஜென்சீஸ்” (Ever Green Agencies) நிறுவனரும் ஐ.எஸ்.ஆர்.பி எக்ஸ்போ உறுப்பினரும் ஆன ந. பாவேந்தன் பேசுகையில், பாக்கு மட்டை எவ்வித கெமிக்கலும் இல்லாத பொருள். ஆயுர்வேத குணங்கள் அடங்கியது. இலகுவாக மக்கும் தன்மை கொண்டதால் சுற்றுப்புறச்சூழலுக்கு மிகவும் ஏற்றது. அதிக சுகாதாரமானது. 100 சதவிதம் இயற்கையானது. மிக முக்கியமாக இந்தப் பொருட்களை தயாரிப்பதற்காக எந்த மரங்களையும் நாம் வெட்டுவதில்லை. அதிகக் குளிர்ச்சி, அதிக சூடு இரண்டையும் தாங்கக் கூடியது பாக்கு மட்டைப் பொருட்கள் என்று கூறினார்.

மேலும் பேசுகையில் பாக்கு மட்டை தட்டு மூலப்பொருட்கள் கொள்முதல் செய்யும் வழிமுறைகள். தட்டு உற்பத்தி செய்யும் வழிமுறைகள், சந்தைப்படுத்தும் வழிமுறைகள், தட்டு உற்பத்தி செய்யும் இயந்திரம் குறித்தும் மற்றும் இயந்திரத்திற்கான அரசின் மானியம் பெறும் வழிமுறைகள் விரிவாக எடுத்துரைத்தார்.பாக்கு மட்டை தட்டு இயந்திரம் குறித்தும் பல்வேறு பயனுள்ள தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். இக்கருத்தரங்கில் 20க்கும் மேற்பட்ட கிராமப்புற இளைஞர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். கவசம்பட்டு கிராமத்தில் இயங்கி வரும் கிராமப்புறக் கல்வி மையத்தின் ஆசிரியர் ஜே. வேல்முருகன் அவர்களின் உதவியுடன் இக்கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது. பாக்கு மட்டை தட்டு பயிற்சிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்- **8754417322**

> **“பாக்கு மட்டை எவ்வித கெமிக்கலும் இல்லாத பொருள். ஆயுர்வேத குணங்கள் அடங்கியது. இலகுவாக மக்கும் தன்மை கொண்டதால் சுற்றுப்புறச்சூழலுக்கு மிகவும் ஏற்றது. அதிக சுகாதாரமானது.”**




பயிற்சியாளர் பாவேந்தன் சிறப்புரையாற்றிய காட்சி



ச.சுரேஷ்கண்ணன், முதுநிலைத்திட்ட மேலாளர், புதிய தலைமுறை அறக்கட்டளை அவர்கள் வரவேற்புரையாற்றிய காட்சி





புதிய தலைமுறை அறக்கட்டளை

எண்: 24, ஜி.என்.செட்டி சாலை, தி.நகர். சென்னை - 600 017 | அலைபேசி: 8754417308, 8754417338, 8754417500

வலை:www.ptfindia.org. www.isrbexpo.org | மின்னஞ்சல்: contact@ptfindia.org